1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போதுள்ள பிரச்சினை கேரளாவிலிருந்து முந்திரிக்கொட்டைகளை தமிழ் நாட்டிற்கு கொண்டு வருவது தடைபட்டிருக்கிறது என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரளாவிலிருந்து இங்கே வந்து தொழில் நடத்துபவர்கள் கொடுக்கவேண்டிய கூலியை குறைத்துக்கொடுப்பது போல் சொன்னார்கள். அதுபற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. கேரளாவைச் சேர்ந்தவர்கள் கன்னியாகுமரியில் இது போன்ற தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எங்களை வந்து கேட்டதால், அங்கேயுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது.

அவர்கள் இது போன்ற பிரச்சினை இருக்கிறது என்று கூறியதால், மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். இங்கே வந்த மத்திய அமைச்சர் சர்மா அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். நமக்கு இருக்கும் கோட்டா போதுமானதாக இல்லை, அதிகம் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். ஒரு கொள்கையை ஒத்துக்கொண்டு, அந்தக் கொள்கையின் அடிப்படையில் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். கேரளா அரசாங்கத்திற்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். இது போன்ற தடை தற்காலிகமானது தான், நிரந்தரமாக இருக்காது என்று சொல்லி இருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முந்திரிக்கொட்டை உற்பத்தியை எப்படி அதிகரிக்கலாம் என்று முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிகமாகக் கோட்டா பெறுவதற்கும் முயற்சி எடுத்து வருகிறோம். கேரளாவிலிருந்து அதிகப்படியாகப் பெற முடியுமா என்றும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டில் முந்திரிக்கொட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு எல்லாவிதமான காரியங்களையும் அரசாங்கம் செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பருத்தி விலை வீழ்ச்சியினால் பருத்தி விற்பனை பாதிப்பும், பருத்தியை நியாய விலையில் அரசே வாங்க வேண்டியதன் அவசியமும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை செழியன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதை, திரு. எட்மண்ட் அவர்கள்—அவருக்கு பதிலாகக்—கொண்டு வருவார்கள்.

THIRU G. R. EDMUND : Mr. Speaker, Sir, on behalf of the hon. Member, Thiru Kovai Chezhian, I call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, namely, the non-sale of cotton due to the sudden fall of its price all over Tamil Nadu, resulting in the sufferings of the agriculturists and the necessity to make immediate measures to purchase the same directly by the Government at a reasonable price.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பற்றிய விவரங்கள் @ எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டு இருக்கிறது. அத்துடன் புதிய தகவல் ஒன்றையும் உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

15—4—1975 அன்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலை வெளியிட்டு இருக்கிறார்கள். நீண்ட இழைப் பஞ்சு இந்த வருடம் ஏற்றுமதி செய்யப்படும் என்றும், எனவே, பருத்தி விவசாயிகள் குறைகளைத் தீர்ப்பதற்கு இது உதவும் என்றும் கருதுகிறேன் என்று கூறியுள்ளார்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையின் சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அறிக்கை மீது நீங்கள் கேட்கக்கூடாது.

(இ) நெல்லை மாவட்டத்தில் கங்கைகொண்டான் கல்லூர் முதலிய இடங்களில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்து குடியேறிய பல அகதிகள் ஏழ்மையாலும் வேலையின்றியும் மரணமுற்றதும் அதனால் ஏற்பட்ட நிலை குறித்தும்.

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely,

"The death of several Ceylon repatriates settled at Gangaikondan and Kallor in Tirunelveli district during the last six months due to poverty and unemployment and the grave situation prevailing among them."

@ 376-379-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.